1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வடுகப்பட்டியில் ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்ட தீர்மானம் எதுவும் நிறைவேற்றவில்லை. இது விஷயமாக ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் எவ்வித மதிப்பீடும் தயார் செய்யப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் வடுகப்பட்டிக்குச் சென்றிருந்த நேரத்தில் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகத் தோண்டப்பட்ட அஸ்திவாரத்தையே பொதுமக்கள் என்னிடம் காட்டினுர்கள். அமைச்சர் அவர்களுக்கு ஒன்றியத்திலிருந்து வேறு தகவல் வந்திருப்பதாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் இதுபற்றி மீண்டும் விசாரித்து அறிக்கை அனுப்பக் கோருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எந்த விதமான மதிப்பீடும் தயார் செய்யாமல், அனுமதியும் பெருமலேயே பாலராஜபுரம் ஊராட்சித் தலைவர் 1963-64-ல் அஸ்திவாரத்திற்கு மண் பறித்திருக்கிருர். அதற்கான செலவு 23 ரூபாய். அவர் அதை அப்படியே விட்டு விட்டுப் போய்விட்டார். இப்போது கட்டடம் இல்லாமல் பொதுச்சாவடியில் நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் ஒன்றியத்தின் மூலம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வற்புறுத்தலாம்.

Peace Corps volunteers

* 297 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether a number of (i) men and (ii) women peace corps volunteers are to take up assignments in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பரசலூர், செம்பனூர் கோயில் ஊராட்சி மன்றங்களின் இணைப்பு

*298 வினு—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பனூர்கோயில் ஊராட்சி ஒன்றிப்புக்கு உள்ளடங்கிய பரசலூர், செம்பனூர்கோயில் ஊராட்சி மன்றங்களிலிருந்து, குறிப்பிட்ட இரண்டு ஊராட்சி மன்றங்களையும் இணைத்து பேரூராட்சி மன்றமாக அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இக் குறிப்பின் மீதான நடவடிக்கையை அரசு ஒத்தி வைத்துள்ளது.

Promotion of First Grade Gramasevaks

* 299 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) when the panel of names of the First Grade Gramasevaks who are eligible for promotion as Panchayat Development Officers and Extension Officers (Education) in 1967-68 in South Arcot District was received from the District Collector;

(b) the number of persons, among them who were selected for promotion during 1967-68;

(c) the number of persons among the selected who were promoted in that year; and

(d) whether the promotion was based on seniority?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) வரவில்லை.

(இ) முதல் (ஏ) வரை : இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இது குறித்து அந்த மாவட்டத்திலிருந்து அரசாங்கத்திற்குப் புகாரோ, கோரிக்கையோ வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட புகாரோ, கோரிக்கையோ வந்ததற்குத் தகவல் இல்லை. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் நியமிக்கப்பட வேண்டியவர்களுடைய எண்ணிக்கையே இன்னும் பாக்கி இருக்கிறது. அது முடிவடைந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உள்ளாட்சி கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் பட்டியலைத் தருவார்கள்.

Health-cum-Tourist Centre at Honnagurki

* 300 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government has received any recommendation from the Collector of Dharmapuri, in his capacity as the Chairman of the District Development Council to sanction a "Health-*cum*-Tourist Centre" at Honnagurki village in Hosur Taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.